## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 39/2024

இன்று 2025 ம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிச்சாமி | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராமன் | கிராமம் | : முருகம்பாளையம் |
| வயது | : 47 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 25-06-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் குடிநீர் சப்ளை செய்யும் வேலை செய்து வருகிறேன். என் மனைவி வேலைக்கு செல்வதில்லை. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் என்ன உறவு முறை என்றால் சகோதர உறவு முறையாகும். தாவாச் சொத்தை நான் சுந்தரம்மாள் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். சுந்தரம்மாளுக்கும் பிரதிவாதிகளுக்கும் என்ன உறவு முறை என்றால் சித்தப்பா, சித்தி உறவு முறையாகும். சுந்தரம்மாள் கையெழுத்து செய்வாரா என்றால் இல்லை கைரேகை வைப்பார்.

2. தாவா பிராதிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் நான் கிரயம் பெற்ற நபரின் பெயர் சுந்தராள் என கண்டுள்ளது என்றால் சரிதான். சுந்தராள் என்பது தான் சரியான பெயராகும். தாவாச் சொத்துக் கட்டிடம் எப்படி கட்டப்பட்டது என்றால் இந்திரா ஆவாஸ் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டது. இந்திரா ஆவாஸ் திட்டத்தின் கீழ் வீடு கட்டியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

3. எனக்கு தமிழ் படிக்கத் தெரியும் எழுதத் தெரியாது. கடந்த 30.03.2017ம் தேதி சுந்தராள் என்பவரிடம் இருந்து கிரயம் பெற்ற சொத்தின் க.ச.எண்.165/28, 165/29 என்கதற்கு பதிலாக க.ச.எண்.165/32 என குறிப்பிடப்பட்டுள்ளது என்பதற்கு பிழைதிருத்தல் பத்திரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. கடந்த 28.09.2022ல்

பட்டா எண் 108, 1519 ல் மேற்படி க.ச.எண். 165/28, 165/29 என்பதற்கு பதிலாக க.ச.எண்.165/32 என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பாக புகார் திருப்பூர் தெற்கு தாசில்தாரிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4, முதல் விசாரணை வாக்குமூலத்தில் 10 க்கு 16 தார்சு கட்டிடமும், 10 க்கு 16 சிமெண்ட் சீட் போட்ட கட்டிடமும் கழிவறையும் உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்தில் 10 அடி பொது வழி தடம் க.ச.எண்.165/27 ல் உள்ளது பொறுத்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவாச் சொத்து விவரத்தில் எனக்கு 3 அடி கிழமேல் தடம் பாத்தியம் உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 10 அடி தடம், 3 அடி தடத்தை அளந்து பார்க்க நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. எனக்கு 10 அடி தடம், 3 அடி தடம் உள்ளது பொறுத்து மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா பிராதிலும், முதல் விசாரணையிலும் க.ச.எண்.169/28, 169/29 குறித்தோ, சொத்தின் செக்குபந்தி விஸ்தீரணம் குறித்தோ, க.ச.எண்.165/27 ல் 10 அடி பொது வழிதடம் குறித்தோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் ரோடுகளில் நடந்து கொள்ளலாம் என்றும் வண்டி வாகனங்கள் ஓட்டிக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. கடந்த 01.03.2024 ம் தேதி பிரதிவாதிகள் என் வீட்டுக்குள் நுழைந்து தகராறு செய்தது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். கடந்த 01.03.2024 ம் தேதி புகார் கொடுத்தேன்.

6. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 02.03.2024 ம் தேதி வீரபாண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் அதற்கான ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றததில் சென்று பார்த்துக் கொள்ளும்படி காவல் நிலையத்தில் கூறி விட்டார்கள். எனக்கு உரிமையில்லாத சொத்தின் மீது பொய்யான சங்கதிகளை கொண்டு பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்யும்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/–A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.